


- வாழ்வோம்

வலையோசை

சோஷியல் மீடியாவில் சுற்றி வரும் சுவாரஸ்யங்கள்... உங்களுக்காக!

P.murugadossmahesh@gmail.com



பெண்ணுக்குப் பாலியல் தொல்லை! த.வெ.க. நிர்வாகி கைது. கஞ்சா கடத்தல்! த.வெ.க. நிர்வாகி கைது. கள்ளநோட்டு விநியோகம்! த.வெ.க. நிர்வாகி கைது. Meth கடத்தல்! த.வெ.க. நிர்வாகி கைது. ஒவ்வொரு வீட்லயும் விஜய் இருக்கார்னு சொன்னது, இப்போ தான் புரியுது டல்பதி.

Khader



தூய சக்தியின் ஆட்சியில் பொதுமக்களுக்குத் தீபாவளிப் பரிசு.. போக்குவரத்துத் துறையை ஒழுங்காக நடத்த வக்கில்லாமல், சேவைகளைக் குறைத்து, பொதுமக்களை வதைக்கத் தொடங்கியுள்ளது, இந்த த.வெ.க. அரசு.. அனைத்து பேருந்துகளிலும் இலவசப் பயணம் என்பது போக்குவரத்துத் துறையை அழிவுப்பாதைக்கு இழுத்துச் செல்லும். இதில் ஆண்களுக்கும் விரைவில் இலவசப் பயணம் என்று மாஃபியா கும்பலால் இன்ஸ்டாவில் பரப்பப்படுகிறது. இந்த ஆட்சி ஒழியும்போது, செய்த நிர்வாகச் சீர்கேடுகளைச் சரிசெய்யவே ஒரு 10 ஆண்டுகள் ஆகும் போல..

வெற்றி அரவிந்த்

தூய சக்தி



TONYXTHALA



‘வெற்றிக் கடத்தல் திட்டம்’ ஒன்று உருவாகிட்டு இருக்கு மக்களே.

பிள்ளைகளைப் பத்திரமா வைத்துக்கொள்ளுங்கள்!

Amutha



முதலமைச்சர அவதூறா பேசுறவங்கள எல்லாம் அரெஸ்ட் பண்றோம்னு சொல்லுறவனுங்க, நயினார் நாகேந்திரன எப்போ கைது பண்ணப் போறீங்க?

அவரு பேசுனத ஆய்வு பண்ணிட்டு இருக்கோம்..

என்ன ஆய்வு பண்ணிட்டு இருக்கீங்க?

மொத அவரு பேசுனது அழிந்துபோன சுமேரியன் மொழியா, அக்காடியன் மொழியா? இல்ல, புராண கிரேக்கமானு பாக்கவேண்டி இருக்கு...

அப்புறம், அவரு பேசுன மொழியோட எழுத்து வடிவங்கள கண்டுபிடிச்சு, அதுக்கு ஏ-ஐ தொழில்நுட்பம் மூலமா ஒலி வடிவம் கொடுக்கவேண்டியது இருக்கு.

அப்புறம், அந்த ஒலியையும் அவரு பேசுனதையும் ஒப்பிட்டுப் பாத்து, அவதூறா இருந்தா நடவடிக்கை எடுப்போம்!

த.வெ.க. நிர்வாகிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்!

கன்னியாகுமரியில், கல்லூரி மாணவிக்கு காரில் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில், த.வெ.க.வின் கன்னியாகுமரி மத்திய மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கிறிஸ்டோபர் என்பவர் சிக்கியுள்ளார். மழைக்கு ஒதுங்கி நின்ற மாணவிகளுக்கு உதவுவது போல நடித்து, காரில் ஏற்றி அழைத்துச்சென்று, பாலியல் தொல்லை கொடுத்துள்ளார், அந்த நபர். த.வெ.க. ஆட்சிக்கு வந்தது முதலே இதுபோல பாலியல் குற்றங்களில் ஆளும் கட்சியினர் ஈடுபடுவது, தொடர்கதையாகி வருகிறது.

50-க்கும் மேற்பட்ட பெண்களை ஆபாசப் படம் எடுத்து மிரட்டியதாக, சேலத்தில் மணிகண்டன் என்பவர் சிக்கினார். ஸ்ரீவைகுண்டத்தில் த.வெ.க. நிர்வாகிகளால் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஒரு பெண் உள்ளாக்கப்பட்டு, குற்றவாளிகளை த.வெ.க. எம்.எல்.ஏ. விஜய் சரவணன் காப்பாற்ற முயன்றது அம்பலமானது. காஞ்சிபுரத்தில் பாலமுருகன், ராமநாதபுரத்தில் ஜெயபால், ஆலந்தூரில் பழனி, ராணிப் பேட்டையில் விஜய் மோகன், சென்னை ஆர்.கே.நகரில் பாம்பு தினேஷ், தூத்துக்குடியில் பிரைட்டர், ரூஸ்வெல்ட், திருவள்ளூரில் பிரகாஷ் (எ) குட்டி, மதுரை கீழமாத்தூரில் கண்ணன், குளித்தலையில் ரமேஷ், வில்லிவாக்கத்தில் மதன்ராஜ், அசோக் நகரில் ஆனந்த், அரக்கோணத்தில் சசிக்குமார் எனப் பெரும் பட்டியலே உள்ளது.

வாரத்திற்கு ஒருவராவது, ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களே பாலியல் வன்கொடுமை வழக்கில் சிக்கிவிடுகிறார்கள். ஆளுங்கட்சி ஆட்களிடம் இருந்து பெண்களைப் பாதுகாக்கத் தனிப்படை அமைக்கவேண்டிய அளவுக்கு, த.வெ.க. நிர்வாகிகளின் அத்துமீறல்கள் அதிகமாகிக்கொண்டே செல்கின்றன.`பொது இடங்களில் த.வெ.க. நிர்வாகிகள் என்று தெரிந்தால், அவர்களிடம் இருந்து பெண்கள் சற்று விலகியே இருங்கள், எச்சரிக்கையோடு இருங்கள்' என்று பொதுநலன் கருதி விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டிய நிலைக்கு தமிழ்நாடு சென்றுகொண்டிருக்கிறது.

ஃப்ளாஷ்பேக்



`கழகத்தின் கடைக்கோடித் தொண்டன்'



சிவா

2015-ஆம் ஆண்டு பிப்ரவரி 5-ஆம் தேதி, என் பிறந்தநாள் அன்று, நம் தானைத் தலைவர் முத்தமிழறிஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்ற தருணம். தலைவரிடம் தேர்தல் நிதி அளிக்கும் கவரின்மீது பெயர், முகவரி, மாவட்டம், கழகப் பொறுப்பு ஆகியவை கேட்கப்பட்டிருந்தன. அதில், கழகப் பொறுப்பு என்கிற இடத்திற்கு நேராக, அந்த கவரின் நீளத்திற்குப் பெரிதாக, ‘கழகத்தின் கடைக்கோடித் தொண்டன்’ என எழுதி இருந்தேன். தலைவர் அதைப் படித்துப் பார்த்து, என்னை நோக்கி புன்னகைத்தது, என் வாழ்நாளில் மறக்க முடியாத மகிழ்ச்சி.

– சிவா, தகவல் தொழில்நுட்ப அணி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர், பெரியகடைவீதி பகுதி, கோயம்புத்தூர்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com



தெரிந்து கொள்வோம்

1993

கோவை 7-வது மாநில மாநாடு!

-ஆம் ஆண்டு கோவையில், கழகத்தின் 7-வது மாநில மாநாடு, இந்தி எதிர்ப்பு மாநாடாக மார்ச் 26, 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. மாநாடு தொடங்குவதற்கு முதல் நாள், மாநாட்டுப் பந்தலுக்குக் கயவர்கள் சிலர் தீ வைத்தனர். அதில் பெரும்பகுதி எரிந்து சாம்பலானது. 10 இலட்சம் பேர் அமரும் பந்தலில், ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் தீப்பிடித்தது. மேடையும் முகப்பும் தீ விபத்தில் பாதிக்கப்படாத நிலையில், திட்டமிட்டபடி மாநாடு நடைபெற்றது. மாநாட்டுப் பேரணியில், 20 இலட்சம் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900